**தலைப்பு 309 – கட்டிடங்கள் திணைக்களம்**

------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 309 – கட்டிடங்கள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கட்டிடங்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டிடங்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வைப்புக்கள்**

மூன்றாம் தரப்பினருக்கு செலுத்துவதற்குள்ள பணமாக பேணிச்செல்லப்படுகின்ற 13/55 பொது வைப்புக் கணக்கின் மீதியான ரூபா 1,014,524,420 தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 571(3) இன் பிரகாரம் காலாவதியான சகல வைப்புக்களும் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் கைவிடப்பட்ட மற்றும் தாமதமான | வேலை முடிவடைந்த மற்றும் நிறுத்தப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் மீதிகள் சேவை பங்களிப்பு நிறுவனத்திற்கு அனுப்புவதற்காக திறைசேரியிலிருந்து கட்டுநிதி கோரப்பட்டுள்ளது. உள்ளபடியான வைப்புத் | சரியான வைப்பு திகதியைக் குறிப்பிடுவதற்கும், வேலை பூர்த்தி செய்த மற்றும் இடையில் நிறுத்தப்பட்ட செயற்திட்டங்களின் வைப்பு மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கும், |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தங்களுக்காக கிடைத்த வைப்புக்கள் ரூபா 1,014,524,420 ஆன பணம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட வைப்பு ரூபா 16,870,929 தொகையும், 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடைலான வைப்பு ரூபா 298,581,860 தொகையும் காணப்பட்டன. 13/52 வைப்புக் கணக்கில் இந்த சகல வைப்புக்களும் கிடைத்த திகதி 2022 சனவரி 01 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த மீதிகளின் சரியான வைப்புத் திகதி சில வருடங்களுக்கு முன்னராக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | திகதியை உள்ளடக்கும் போது காணப்பட்ட முறைமையில் இருந்த பிரச்சினையின் அடிப்படையில் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு தரவுகளை உள்ளடக்கும் போது நாளதுவரையாக்கப்பட்ட திகதி உள்ளடக்கப்பட்டுள்ளது. | ஏனைய காலாவதியான வைப்புப் பணத்தை நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 571(1) இன் பிரகாரம் ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும், காலாவதியான சகல வைப்புக்கள் தொடர்பான நிரல் ஒன்று தயாரிக்க வேண்டியிந்த போதிலும் அவ்வாறான நிரல் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் கணக்காய்வினால் சுட்டிக்காட்டுள்ள பிரகாரம் ஒவ்வொரு அரை ஆண்டின் இறுதியின் போதும் காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக பட்டியல் தயாரிக்கப்படுமென குறிப்பிடுகின்றோம். | நிதிபிரமாணத்தின் பிரகாரம் சகல வைப்புக்கள் தொடர்பாகவும் சரியான தகவல்களை உள்ளடக்கிய பட்டியலொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

**(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக் கூற்றில் ACA-6 படிவத்திலும், திறைசேரி SA-82 படிவத்திலும் குறிப்பிடப்பட்ட நிதியல்லா சொத்துக்களின் 10 வகைகள். 2021 திசெம்பர் | திறைசேரி குறிப்பு 66 உடன் ஒப்பிடும் போது சிகாஸ் முறைமையில் உள்ளடக்கப்படாத பொருட்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | முன்னைய ஆண்டின் நிதியல்லாச் சொத்துக்களின் இறுதி மீதியில் மீளாய்வாண்டின் |

| | | | |
|---|---|---|---|
| | 31 இல் உள்ளவாறான மீதியின் கூட்டுமொத்தம் ரூபா 309,229,711 ஆக இருந்ததுடன் 2022 சனவரி 01 இல் உள்ளவாறு அந்த ஆரம்ப மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 372,890,462 ஆனமையால் 2022 இன் நிதிக் கூற்றுக்களில் ஆரம்ப மீதிகளில் ரூபா 63,660,751 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த நிதியல்லாச் சொத்துக்களின் ஆரம்ப மீதியில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | அதன் பிரகாரம் மதிப்பீட்டு சபையொன்றின் மூலம் அவ்வாறு உள்ளடக்கப்படாத சொத்துக்களின் விலைகளை தீர்மானித்து வலய அலுவலகங்களில் சிகாஸ் முறைமையில் அந்தத் தரவுகளைக் குறிப்பிடுகின்ற முறைமையான Add Opening Balance ஆக உள்ளடக்கப்பட்டிருந்தது. | ஆரம்ப மீதியுடன் இணக்கம் செய்யக்கூடிய வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) | சொத்துக்களை இனங்காணல், கணக்கீடு செய்தல் மற்றும் நிருவகிக்கும் வகையில் நிதியல்லாச் சொத்துக்களுக்காக திணைக்களத்தில் இலக்க முறைமையொன்று பின்பற்றப்படல் வேண்டும். திணைக்களத்தின் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் உருவாகின்ற சொத்துக்களின் நிரலில் உள்ள சொத்துக்கள் உள்ளபடியாக நிறுவனத்திற்குச் சொந்தமாக பௌதீக ரீதியில் காணப்படுகின்ற சொத்துக்களா என குறித்துரைத்த உறுதிப்படுத்தலைச் செய்து கொள்வதற்கு ஏதாவது குறியீட்டு முறைமையொன்றும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | எமது திணைக்களத்தின் சகல சொத்துக்களும் சிகாஸ் முறைமையில் உள்ளக்கப்படாதிருந்தமையா லும் உரிய வகைப்படுத்தல் செய்யப்படாதிருந்த சரியான வகைப்படுத்தல் செய்யப்படாதிருந்தமையினா லும் எங்களால் சொத்துக்களின் இலக்கமிடல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. தற்போது சொத்துக்கள் சரியாக வகைப்படுத் தப்பட்டு சிகாஸ் முறைமையில் சரியான முறையில் தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. | நிதியல்லாச் சொத்துக்களை கணக்கு வைக்கும் போது தனித்தனியாக இனங்காணக்கூடிய வகையில் குயீட்டு இலக்கம் ஈடுபடுத்தப்படல் வேண்டும். |

**(இ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்லப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| கடந்த 06 வருடங்களுக்குரியதாக நிறுவனத்தால் நிறைவேற்றுவதற்கு 451 செயற்திட்டங்கள் பொறுப்பேற்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தப் பதிவேட்டில் பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி நாளதுவரையாக்காமையினால் அந்த பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததா என உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | பிரதான அலுவலகத்தின் ஒப்பந்தத்திற்குரிய பெறுகை நடவடிக்கைகள் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடல் வரையான தகவலும் உரிய பணிகள் முடிவடையும் வரையான தகவல்கள் செயற்திட்டத்திற்குரிய வலய அலுவலகத்தில் பேணிச் செல்லப்படுகின்ற கோவைகளின் உள்ளடங்கி உள்ளது. | சகல ஒப்பந்தங்களினதும் தற்போதைய நிலைமையைக் காண்பிக்கும் வகையில் பிரதான அலுவலகத்தில் ஒப்பந்த பதிவேடு முறையாகவும் நாளாதுவரையாகவும் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

**(ஈ) கணக்காய்வு சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக் கூற்றுக்களில் நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்படுகின்ற உத்தியோகபூர்வ விடுதிகள், தங்குமிடம் அல்லாத கட்டிடங்கள், ஏனைய கட்டமைப்புக்கள் மற்றும் பூர்த்தி செய்யப்படாத வேலைகள் மற்றும் கட்டமைப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 258,272,189 தொகையும், போக்குவரத்து உபகரணங்கள், ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் ஏனைய நிதியல்லா கற்பனைச் சொத்துக்களின் கூட்டுமொத்தம் ரூபா 121,561,670 தொகையும், ரூபா 461,298,859 பெறுமதியான காணிகளும் தொடர்பாக விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்காமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | SA-82 படிவத்தில் மென்பொருள் பிரதியொன்று வழங்கப்பட்டுள்ளதுடன் அதில் விரிவான பட்டோலைகள் மென்பொருள் பிரதி உங்களின் கோரிக்கையின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. அச்சிடலைப் பெற்றுக்கொள்ளும் போது கணிசமான கடதாசி அளவு செலவாகின்றமையால் மென்பொருள் பிரதி இணைப்பதற்கு பதிலாக மென்பொருள் பிரதி உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சொத்து விடயங்கள் தனித்தனியாக தெளிவாக இனங்காணக்கூடிய வகையில் போதியளவான விபரங்களை உள்ளடக்கிய பட்டியல் தயாரித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் மரணமடைந்த உத்தியோகத்திரடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 170,275 கடன் மீதி 2-3 வருடங்களுக்கு இடையிலான காலவீச்சில் காணப்பட்டதுடன் ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்திரடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 115,861 கடன் மீதி 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ரூபா 170,275 ஆன 2-3 வருட காலவீச்சிலான கடன் மீதி உரித்தான, மரணமடைந்த உத்தியோகத்தரின் கணவரும் மரணமடைந்திருந்ததுடன் பிள்ளைகளும் இல்லாமையினால் நிலுவைக் கடன் மீதி அறவிடுவதற்கான தேவையின் அதனை மரணப்பணிக்கொடையில் இருந்து அறவிடுவது தொடர்பாக கவனத்தில் கொள்வதற்குரிய ஆவணங்கள் மீண்டும் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | பொருத்தமான பிரகாரம் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டிற்குரிய சேவையிலிருந்து சேவையைக் கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர் இருவரிடமிந்து இருவருக்குரிய 03-12 மாதங்களுக்கிடையிலான காலம் நிலுவையாக காணப்பட்ட கடன் மீதி ரூபா 441,095 ஆக இருந்ததுடன் 03 மாதங்களுக்கு குறைந்த கிடைக்க வேண்டிய கடன் மீதி ரூபா 242,547 ஆகும். | சேவையை விட்டுச் சென்ற 03-12 மாத கால வீச்சிக்கு உரியதாக நிலுவை கடன் ரூபா 441,095 உத்தியோகத்தர் இருவரிடமிருந்தும், ரூபா 232,650 மற்றும் ரூபா 208,445 ஆன கடன் மீதிகளைக் கொண்டே தயாரிக்கப்பட்டிருந்தது. நிலுவைக் கடன்களை அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2023.04.30 ஆம் திகதி வரையில் மேலும் அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 225,225 ஆகும். | சகல கடன் மீதிகளையும் பிணையாளர்கள் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏறபாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக் கோவை | | | |
| (i) XIX ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவு | ஏதாவது பதவியொன்றுக்கு ஒதுக்கப்பட்ட இல்லங்கள் தவிர ஏனைய சகல இல்லங்களும் வாடகைக் காலம் 05 வருடங்களாக இருக்க வேண்டிய போதிலும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களால் அந்த ஏற்பாடுகளை கவனத்திற் கொள்ளாமல் இல்லங்களில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக குடியிருந்து வருகின்றனர். | நிரற்படுத்தப்பட்ட வீடுகளுக்குரிய உத்தியோகத்தர்களின் பதவிகளை வகிக்கின்றவர்கள் குடியிருக்கின்றனர். அவ்வாறே தாபனவிதிக்கோவையின் XIX அத்தியாயத்தின் 6.12 ஆம் பிரிவின் பிரகாரம் இல்லங்கள் ஒதுக்கப்பட்டிருந்த அதிகாரத் தரப்பினரின் அங்கீகாரத்தின் கீழும் உத்தியோகத்தர்கள் 05 வருடங்களுக்கு குடியிருக்கின்றனர். | தாபனவிதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இல்லங்களை ஒதுக்குகின்ற அதிகாரத் தரப்பினரின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் குடியிருப்பதற்கான காலம் நீடிக்கப்படல் வேண்டும். |
| (ii) XIX ஆம் அத்தியாயத்தின் 6.1.1 ஆம் பிரிவு | குடியிருப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள மொத்த கால எல்லையில் ஒரு பகுதிக்கு மேற்பட்ட காலம் ஒரு சேவை நிலையத்திலிருந்து அரசாங்கத்தின் இல்லமொன்றில் குடியிருக்கின்ற வரப்பிரசாதங்களுக்கு உரிமை கோரிய உத்தியோகத்தருக்கு | தற்போது இந்த உத்தியோகத்தர்களின் இல்லங்களைப் பெற்று ஏனைய உத்தியோகபூர்வ இல்லங்களாக வழங்கப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அவ்வாறு முன்னர் குடியிருந்த காலம் முடிவடைந்த திகதியில் இருந்து 05 வருடங்கள் கடக்கும் வரை அந்த சேவை நிலையத்தில் இருக்கின்ற அதன் இல்லமொன்றுக்காக கவனத்திற் கொள்வதற்கு தகுதியற்றதாகக் காண்பிக்கப்பட்ட போதிலும் உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்பாட்டிருந்தார். | | |
| (ஆ) | திறைசேரிச் செயலாளரின் 2017.06.28 ஆம் திகதிய MF/CG/02(iv) ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2017 | | | |
| (i) | 05 ஆம் பிரிவு | நிறுவனத்திற்குச் சொந்தமான ரூபா 151,620,000 பெறுமதியுடைய மோட்டார் வாகனம் தொடர்பான தகவல்கள் கொமட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை சமர்ப்பிக்காத இருந்தமையாலும் தேவையான போது சுற்றறிக்கை தற்போது அறிவித்தமையாலும் அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் மோட்டார் வாகனங்கள் தொடர்பான தகவல்களை அறிக்கை இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 07 ஆம் பிரிவு | கொமட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு காலாண்டு ரீதியாக சொத்துக்கள் கொள்வனவு செய்தல் மற்றும் பெற்றுத் தீர்த்தல் அறிக்கையிடப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு செய்தல் மற்றும் விற்றுத் தீர்த்தல் தொடர்பான காலாண்டு ரீதியான அறிக்கை சமர்ப்பித்தல் தவறியிருந்தது. எதிர்காலத்தில் நாளதுவரையாக்கி அந்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டு ரீதியான அறிக்கை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நிதிப் பிரமாணம் 787 இன் பிரகாரம் சராசரியாக தீர்மானிக்கப்படுகின்ற அரசாங்கத்தின் சகல நிர்மாணங்கள் மற்றும் வேலைகளை அமுல்படுத்தல் தொடர்பாக அரசாங்கத்தின் வேலைத் திணைக்கம் (கட்டடத் திணைக்களம்) பொறுப்பு உடையதாகும். அந்த பணிகள் மற்றும் ஏனைய நிர்மாண பணிகளை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்திற்குரிய 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணத் துறைக்குரிய சிரேஷ்ட நிலையில் 78 பொறியியலாளர்களும், சிரேஷ்ட நிலையில் உள்ளக நிர்மாண வடிவமைப்பாளர்கள் 13 பேரையும் உள்ளடக்கிய திட்டமிடல் கலைஞர்கள், அளவிடை ஆய்வாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் என 210 பேரையும் உள்ளடக்கிய பதவியணியினர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

### 3.2 செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு வேலை வாய்ப்பை மேம்படுத்துதல் மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் அமைச்சு, தொழிலாளர் அமைச்சு கட்டிடத்திற்கு எடுத்துச் செல்வதற்காக ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் இணக்கப்பாட்டு உடன்படிக்கை கைச்சாத்திட்டு ஒப்பந்தத்தின் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தத்தைப் பூர்த்தி செய்து கையளிக்க வேண்டிய திகதியை விஞ்சியிருக்கும் போது ஒப்பந்தத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி மாற்றப்பட்டிருந்தது. இதன் காரணமாகவும் உரிய பணிகளை நிறைவேற்றுதல் தாமதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த ஒப்பந்தத் தொகை மொத்த வேலை மதிப்பீட்டை விஞ்சி இருந்தமையால் அது தொடர்பாக சேவைப் பங்களிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்காக அந்த அமைச்சின் அதுவரையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த பிரித்தல் போன்ற தேவையான மாற்றங்கள் மேற்கொண்டு பொருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கையளிக்கப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் பணிகள் நிறைவேற்றாமையினால் இந்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் காணப்பட்ட பொருட்களை பயன்படுத்தி பிரித்தல் போன்ற பொருத்தக்கூடிய வகையில் திட்டங்கள் தயாரித்து புதிய கூறுவிலை கோரி | மதிப்பீட்டு தயாரிக்கும் போதும் ஒப்பந்தத்தைக் கையளிக்கும் போதும் பெறுகை வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 9,146,500 ஆன களுத்துறை கருமாந்தபுரயின் நிர்மாண ஒப்பந்தந்திற்காக கட்டிடங்கள் திணைக்களத்திற்கு முதலாவது கொடுப்பனவாக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 6,198,260 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மிக நீண்ட காலம் கடந்த ஒப்பந்தம் 2022 ஆம் ஆண்டின் போது உப ஒப்பந்தகாரர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்ததுடன் அதற்காக உரிய நிர்மாணப் பணிகள் கையளித்த நிறுவனத்தின் இணக்கப்பாடும் காணப்படவில்லை. | இந்த செயற்திட்டத்தின் ஆரம்ப கிரய மதிப்பீடு 2018.10.15 ஆந் திகதி சேவைப் பங்களிப்பு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு 2019.08.08 ஆந் திகதி மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு சேவை பெறுநர் நிறுவனத்தின் மூலம் 2021.06.30 ஆம் திகதி காசோலை மூலம் முதலாவது கொடுப்பனவு ரூபா 6,198,260 தொகை கட்டிடங்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. பின்னர் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொண்டு 2022.12.22 ஆந் திகதி இந்த செயற்திட்டம் ஒப்பந்தகாரருக்கு ரூபா 9.8 மில்லியனுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் இதுவரையால் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியினால் மூலப் பொருட்களின் விலைகள் அசாதாரணமாக உயர்வடைந்து சென்றமையால் விலை முரண்கள் மதிப்பீட்டை விஞ்சி சென்றமையும், மூலப் பொருள் பற்றாக்குறை மற்றும் எரிபொருள் பற்றாக்குறையினால் ஒப்பந்தகாரர் வேலைகளைச் செய்வதற்கு முடியாதிருந்ததாக அறிவித்திருந்தார். | நிதிப் பிரமாணம் 787 இன் பிரகாரம் திணைக்களம் கையேற்கின்ற நிர்மாண ஒப்பந்தங்களை தாமதமின்றி குறித்துரைத்த காலப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 156,267,463 ஆன குறுந்துவந்த பொலிஸில் தனிப்பட்ட வீட்டு நிர்மாணம், மஹாஓய சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தின் கட்டிடத்தை நிர்மாணித்தல் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மின்சார உற்பத்தி இயந்திரம் மற்றும் வளிப்பதனாக்கி இயந்திரம் என்பன வழங்கி பொருத்துதல் போன்ற 03 ஒப்பந்தங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் ஒரு பகுதிப் பணம் கட்டிடத் திணைக்களத்திற்கு வழங்கி நீண்ட காலம் கடந்திருந்த போதிலும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. தற்போது பொருளாதார நெருக்கடிகளுக்கிடையில் திறைசேரியில் இருந்து பணம் கிடைக்காமை மற்றும் ஒப்பந்தகாரருக்கு பணம் செலுத்தாமையின் அடிப்படையில் இந்த ஒப்பந்தம் மூன்றும் கைவிடப்பட்டிருந்தது. | குருந்துவத்த பொலிஸில் விவாகமாகாதவர்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமை, சேவைப் பங்களிப்பாளரால் செயற்திட்ட உடன்படிக்கைக்கு இணங்க கட்டிட வளவினை கையேற்காமல் இருந்தமை, நிர்மாண நடவடிக்கைகளுக்கு அத்தியவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படாதிருந்த வீடுகளாகும்.<br><br>மஹஓய சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் கட்டிட நிர்மாணம் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் 2020 ஆம் ஆண்டிற்காக நிதி ஏற்பாடு கிடைத்திருக்கவில்லை. பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்காக கோரிக்கை ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மின் உற்பத்தி இயந்திரம் மற்றும் வளிப்பதனாக்கி இயந்திரத்தை வழங்கி பொருத்துவதற்கான ஒப்பந்தம் 2021.08.18 ஆம் திகதி கையளிக்கப்பட்டிருந்ததுடன் அது 2022 திசெம்பர் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப் பட்டிருந்தது. துணைப்பாகங்களை | நிதிப் பிரமாணம் 787 இன் பிரகாரம் திணைக்களம் கையேற்கின்ற நிர்மாண ஒப்பந்தங்களை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்து சரியான காலப் பகுதியில் போதியளவான செயலாற்றலை கைப்பெற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br><br>நிதிப் பிரமாணம் 705 இன் பிரகாரம் பொறுப்புக்களை புறக்கணிக்கின்ற ஒப்பந்தகாரர் தொடர்பாக நடவடிக்கை எடுத்து அதன் பிரகாரம் பொருத்தமான தீர்மானங்களுக்கு உடன்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இறக்குமதி செய்வதற்காக 87 சதவீத விலை முரண்பா டொன்று வழங்குமாறு கோரப்பட்டிருந்ததுடன் இந்த ஒப்பந்தம் 2023 ஏப்ரல் மாதம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டு முதல் 2021 வரை உடன்படிக்கை செய்யப்பட்ட கைதடி ஆயர்வேத வைத்தியசாலையின் பிரதான மருத்துவ உத்தியோகத்தர் ஓய்வு அறை நிர்மாணம், வெல்பொத்துவெவ கொபைகனே மத்திய மருந்தக நிர்மாணம், காரைதீவு பிரதான வீதியின் வாயில் நிர்மாணம் மற்றும் வரக்காப்பொல தொழிலாளர் அலுவலகத்தின் நிர்மாணித்தல் போன்ற செயற்திட்டங்களுக்காகவும் உடன்படிக்கை செய்து நீண்ட காலம் நிறைவேற்றப்படா திருந்தமையால் பின்னர் தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 03/2022 இன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் போது கைவிடப்பட்டிருந்தது. | கைதடி ஆயர்வேத வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த நிர்மாணம் நிர்மாணப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் இறக்குமதி செய்த நிர்மாணப் பொருட்களின் விலைகள் உயர்வடைந்து சென்றமையாலும் பெல்பொத்துவெவ மத்திய மருந்தக கட்டிட நிர்மாணம் - கட்டம் II தொடர்ச்சியாக ஒப்பந்தகாரர் அபிவிருத்தி செய்தலை புறக்கனித்திருந்தமையாலும் காரைதீவு பிரதான வீதியில் வாய்க் கதவை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டத்தின் வேலைகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினாலும் 2020ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் வரக்காப்பொல தொழிலாளர் அலுவலகத்தின் நிர்மாணங்கள் 2022.03.22 ஆந் திகதி ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட போதும் ஒப்பந்த நிறுவனத்தால் சேவை நிறைவேற்றப்படாமையின் அடிப்படையில் பூர்த்தி செய்ய முடிவுறுத்தப்பட்டுள்ளது. | உடன்படிக்கை செய்து நீண்ட காலம் கடந்திருந்த போதிலும் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்படாமை தொடர்பாக நிதிப் பிரமாணம் 705 இன் பிரகாரம் பொறுப்புக்களை புறக்கனிக்கன்ற ஒப்பந்தகாரர்களுக் கு நடவடிக்கை எடுக்க வேண்டிய இருந்ததுடன் உரிய அதிகாரத் தரப்பினரின் குறித்துரைத்த காலப் பகுதியின் போது தேவையான அங்கீகாரத்தைப் பெற்று செயற்திட்டம் நிறைவேற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | அரச மற்றும் பகுதி அரச நிறுவனங்களினால் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு முன்னை 05 ஆண்டு காலத்தில் கையளிக்கப்பட்ட ரூபா 659 மில்லியன் தொகையை விஞ்சி 23 நிர்மாண ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. | இதனால் 20 செயற்திட்டங்களும் அமைச்சரவைத் தீர்மானத்தின் கீழ் அரை அரச சிறுவனமான தேசிய இயந்திர உபகரண நிறுவனக் கட்டிடத்தின் நோக்கம் அந்த நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்ட ஒப்பந்தத்தில் காணப்பட்டது. தற்போது வழங்கப்படுகின்ற ஒப்பந்தம் தொடர்பாக வழங்குநர்களுக்கும் மற்றும் ஊழியர் ஒப்பந்தத்திற்காக கொடுப்பனவு செய்யாமையினால் அதற்காக தேசிய இயந்திர உபகரண நிறுவனம் முன்னிற்காமையினால் சில செயற்திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடியாதிருந்தது. மிகுதி மூன்று ஒப்பந்தங்களும் ஒப்பந்தகாரரால் ஒப்பந்தத்தின் பிரகாரம் வேலை செய்யாமை, சேவைப் பங்களிப்பாளர் நிறுவனத்தால் நிதி ஒதுக்கப்படாமை, செயற்திட்டத்திற்குரிய வேலைத்தளத்தை நிறைவேற்ற முடியாதிருந்தமை போன்ற காரணங்களினால் கைவிடப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 705 இன் பிரகாரம் பொறுப்புக்களைப் புறக்கணிக்கின்ற ஒப்பந்தகாரர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமையும் செயற்திட்டத்திற்காக ஒப்பந்தங்களை கையளிப்பதற்கு முன் சாத்திவள ஆய்வொன்றினால் செயற்திட்டம் நிறைவேற்ற முடியுமா என்பது தொடர்பாக உறுதிப்படுத்துதல் வேண்டும். |

## 3.3. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆகஸ்ட் 15 ஆம் திகதியில் இணைந்த வீட்டு உரித்துக்கள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் கூட்டு ஆதனங்களைப் பதிவு செய்வதற்காக பாதுகாக்கப்பட்டமையைப் பரீட்சித்து சான்றிதழ் விநிகோகிக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 36 வீட்டு அலகுகள் பௌதீக ரீதியில் பரீட்சிக்கப்படாதிருந்ததுடன் 710 அலகுகளைப் பரிசோதிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் சான்றிதழ் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 மே 25 ஆம் திகதியில் உள்ளவாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் கிடைத்த 23 செயற்திட்டங்களில் 16 இனது அறிக்கை தற்போது விநியோகிக்கப்பட்டுள்ளது. கொவிட் தொற்று நோய் முடிவடைந்ததன் பின்னர் மீண்டும் உத்தியோகத்தர்கள் பரிசோனைக்காக ஈடுபடுத்தப் பட்டுள்ளதுடன் அந்த அறிக்கை இந் நாட்களில் தயாரிக்கப்படுகின்றது. ஏனைய அரசாங்கத்தின் நிறுவனங்களுக்குரிய 05 செயற்திட்டங்களின் அறிக்கை தற்போது விநியோகிக் கப்பட்டுள்ளது. மிகுதி 05 செயற்திட்டங்களையும் பரீட்சிப்பதற்குத் தேவையான திட்டங்கள் மற்றும் ஏனைய ஆவணங்கள் தற்போது கோரி அனுப்பப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தால் நிறைவேற்றவேண்டிய தமது பணிகளை விரைவாகப் பூர்த்தி செய்து உரிய செயலாற்றலைக் அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் முழுமையான செயற்திட்டம் (Turnkey) 98 கிடைத்திருந்த போதிலும் அதில் 07 செயற்திட்டங்களில் எந்தவொரு பணிகளும் மேற்கொள்ளப்படாதிருந்தது டன் வருடாந்த நிதி ஏற்பாடு ரூபா 294.82 மில்லியன் ஆன 11 செயற்திட்டங்களின் பௌதீக செயல் | 2022 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற 98 செயற்திட்டங்களில் எந்தவொரு பணிகளும் நிறைவேற்றப்படாத 07 செயற்திட்டங்களில் 02 செயற் திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டு (Terminate) முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் 03 செயற்திட்டங்களுக்காக நிதி ஏற்பாடு கிடைக்கவில்லை. ஒரு செயற்திட்டம் உரிய சேவை | செயற்திட்டங்களை திட்டமிடப்பட்ட பிரகாரம் ஆரம்பித்து அமுல்படுத்துவதற்கும் சரியான செயலாற்றலை அடைந்து கொள்வதற்கும் திணைக்களத்தின் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முன்னேற்றம் 02 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. | வழங்கும் நிறுவனங்கள் மூலம் மீண்டும் கேள்வி கோரப்பட்டுள்ளது. மிகுதி செயற்திட்டத்தை கைவிடு வதற்காக கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வருடாந்த நிதி ஏற்பாடு ரூபா 294.82 மில்லியன் ஆன 11 செயற்திட்டங்களில் 05 செயற்திட்டங்கள் 2023 ஆம் ஆண்டில் இதுவரையில் அமுல் படுத்தப்படுவதுடன் அந்த செயற்திட்டங்களின் ஒட்டுமொத்த செயல் முன்னேற்றம் 12, 37, 51, 74 மற்றும் 79 சதவீதங்களாக இருந்தது. 06 செயற்திட்டங்களுக்காக இதுவரை நிதி ஏற்பாடு கிடைத்திருக்கவில்லை. | |
| (iii) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் ஆலோசனை ரீதியான (Consultancy) சேவை வழங்குவதற்காக 25 கேள்விகள் கிடைத்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதில் 04 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. வருடாந்த நிதி ஏற்பாடு ரூபா 431.82 மில்லியன் ஆன 10 செயற்திட்டங்களின் பௌதீக செயல் முன்னேற்றம் 03 சதவீதம் முதல் 45 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | 2022 ஆம் ஆண்டில் ஆலோசனை ரீதியான 33 செயற்திட்டங்கள் கிடைத்திருந்ததுடன் அதில் எந்தவொரு பணிகளும் நிறைவேற்றப்படாத 03 செயற்திட்டங்களின் கேள்வி கோரும் நடவடிக்கைகள் இறுதிக் கலாண்டில் மேற்கொள்ளப்பட்டமையால் செயற்திட்டத்தைக் கையளிப்பதற்காக போதியளவான காலம் கிடைக்கவில்லை. | செயற்திட்டங்களை திட்டமிடப்பட்ட பிரகாரம் ஆரம்பித்து அமுல்படுத்துவதற்கும், சரியான செயலாற்றலை அடைந்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 செயற்திட்ட முகாமைத்துவம்

பின்வரும் அவனதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள் தொடர்பாக கொன்றோலர் நாயகம் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி திணைக்களத்திற்குச் சொந்தமான 45 காணிகள் காணப்பட்டதுடன் அதில் 13 காணிகளுக்கான உரித்துறுதி காணப்பட்ட போதும் மிகுதி 32 காணிகளுக்காக உரித்துறுதி காணப்படவில்லை. மேலும் 25 காணிகளுக்காக மதிப்பீட்டு பெறுமதியும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | உரித்துறுதியைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையாக அளவிடல் நடவடிக்கைகள் மேற்கொண்டு நில அளவையாளர் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கும் உரித்துறுதியை வழங்குமாறு உரிய நிறுவனங்களிடம் கோரிக்கை விடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொடர்ச்சியாக விசாரணை செய்து உரித்துறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நில அளவையாளர் திட்டத்தைத் தயாரித்து சொத்துக்கள் தனியாக மதிப்பீடு செய்யப்பட்டு பெறுமதி காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 09 உத்தியோகபூர்வ இல்லங்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் சில உத்தியோகபூர்வ இல்லங்களில் காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையின் காரணமாக பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாத நிலைமையில் காணப்பட்டது. | ஒதுக்கப்படாத உத்தியோகபூர்வ இல்லங்கள் காத்திருத்தல் பட்டியலின் பிரகாரம் புதிய உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உள்ள உத்தியோகபூர்வ இல்லங்களை திருத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் 2022 ஆம் ஆண்டில் போதியளவான நிதி ஏற்பாடு கிடைத்திருக்கவில்லை. | குறைவாகப் பயன்படுத்தப் படுகின்ற உத்திகபூர்வ இல்லங்களை மிகவும் விரைவாக பழுதுபார்த்து உச்ச அளவில் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2020 மார்ச் மாதம் முதல் சுற்றுலாப் பிரயாணிகளுக்கு தங்காலை சுற்றுலா விடுதி வழங்கப் பட்டிருக்கவில்லை. எனினும் உரிய திட்ட முறைமையின் கீழ் நிதி செலுத்தி ஒதுக்கிக் கொள்ளாமல் வெளி நபர்களில் ஒரு தரப்பினர் சுற்றுலா விடுதியில் தங்கியிருந்தமையின் காரணமாக நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் அசாதாரணமாக அதிகரித்திருந்தது. எனினும் விடுதியின் பராமரிப்புகளுக்காக செலவினங்களைச் செய்வதற்கு எந்தவொரு வருமானமும் கிடைத்திருக்கவில்லை. மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் துண்டிக்கப்படுவதாக இலங்கை மின்சார சபையும், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையிலிருந்தும் 2022 ஒக்டோபர் 18 ஆம் திகதி பணிப்பாளர் நாயகத்தினால் கோரிக்கை விடப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2023 மே 24 ஆம் திகதி மின்சாரமும் 2023 மே 17 ஆம் திகதி நீரும் துண்டிக்கப்பட்டிருந்தது. எனினும் அனுமதியற்ற நபர்கள் தங்கியிருந்த காலத்திற்காக நீர் மற்றும் மின்சார செலவினமான ரூபா 666,447 தொகையில் உரிய நபர்களிடமிருந்து மீளளிப்பு செய்து கொள்ளமுடியாதிருந்ததுடன் அது திணைக்களத்திற்கு நட்டமாக இருந்தது. | இது தொடர்பாக உரிய சகல தரப்பினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் துண்டிக்கப்பட்டுள்ளது. | உடனடியாக நீர் மற்றும் மின்சார செலவினங்களை மீளளிப்புச் செய்து கொள்வதற்கும், சுற்றுலா விடுதியை வருமானம் உழைக்கக் கூடிய வகையில் செயற்படுத்துதல் வேண்டும். |

### 3.5 நட்டம் மற்றும் இழப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2016 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது ஏற்பட்ட இரண்டு வாகன விபத்துக்கள் தொடர்பாக ஏற்பட்ட ரூபா 89,597 நட்டம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நட்டம் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்காக திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அனுப்பப்பட்டுள்ளது. இலக்கம் 300-4237 என்ற வாகனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | இழப்பு மற்றும் நட்டத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.

பின்வரும் அவனதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (i) நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய கட்டிடங்கள் திணைக்களத்தால் தமது விடயப்பரப்பின் கீழ் உள்ள பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டி இருந்தது என்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக திணைக்களத்தால் தமது விடயப்பரப்பிற்குரிய பணிகள் இனங்காணப்படவில்லை. | 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அறிவித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ஆண்டு 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக கட்டிடத் திணைக்களத்தினால் அறிந்திருக்காமையின் காரணமாக அதன் பணிகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய இடங்கள் தொடர்பாகவும், இலக்குகள் தொடர்பாகவும் இலக்குகள் அடைவதை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை. | நிலைபேறான நோக்கங்களை மீண்டும் சரியாக இனங்கண்டு 2023 ஆம் ஆண்டின் போது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2023 யூன் 15 இற்கு முன்னர் அதை குறித்துரைத்த ரீதியில் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அறிவித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவனதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது. மீளாய்வாண்டிற்காக ஆளணி சம்பளங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 288 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு நபரின் செலவினம் ரூபா 567,819 ஆக இருந்தது. | ஊழியர் வெற்றியங்களை நிரப்புவதற்கான நியமன அதிகாரிகள்/அரசாங்க சேவை ஆணைக்குழு/அரச நிர்வாக அமைச்சு/ முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்/ பல்நோக்கு அபிவிருத்தி திணைக்களம் என்பவற்றிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தால் வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது பதவிகள் எண்ணிக்கையைத் திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
| --- | --- | --- | --- | --- |
| ----- | ------ | நிரந்தர | ஒப்பந்த | |
| சிரேஷ்ட நிலை | 126 | 102 | - | 24 |
| மூன்றாம் நிலை | 24 | 05 | - | 19 |
| இரண்டாம் நிலை | 285 | 270 | - | 42 |
| ஆரம்ப நிலை | 178 | 128 | 03 | 50 |
| | ----- | ----- | ----- | ----- |
| மொத்தம் | 613 | 505 | 03 | 135 |
| | === | === | === | === |